# அமைதிப்படைக்கு ஆதரவாக யாழ். நகரில் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி


விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 2 | துல்ஹஜ்தா 11 | இதழ் 2[illegible]

யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 16-06-1989


(யாழ்ப்பாணம்)

இந்திய அமைதிப்படை இலங்கையைவிட்டு வெளியேறக் கூடாது, அரச ஊழியர்கள் தமது கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்த இவ்வூர்வலம் யாழ். மத்திய பஸ் நிலையத்தை அடைந்து, அங்கிருந்து கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, பருத்தித்

(7-ம் பக்கம் பார்க்க)

## "அமைதிப்படை வெளியேறினால் மீண்டும் வரும் நிலை கூடாது"!

[யாழ்ப்பாணம்]

"இலங்கைக்கு அமைதி காக்கும் நோக்குடன் வந்த இந்திய அமைதிப் படையினர் இந்த நாட்டைவிட்டுப் போவதாக இருந்தால் நிரந்தரமாகவே போகவேண்டும். மீண்டும் இங்கு வரும் நிலை ஏற்படக்கூடாது" என்று வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெரு

(8-ம் பக்கம் பார்க்க)

# பிரதமர் காந்தியின் கருத்துக்கு இலங்கை அரசு கண்டனம்!

## அமைதிப்படை விவகாரத்தில் இருநாட்டு உறவில் விரிசல்

(கொழும்பு)

இந்திய அமைதிப்படையை திருப்பி அழைக்குமாறு இலங்கை விடுத்த கோரிக்கை தொடர்பாக இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் இந்திய வெளியுறவு அதிகாரிகளும் வெளியிட்ட கருத்துக்களை இலங்கை அரசு கண்டித்திருக்கிறது.

அமைதிப்படை இலங்கைக்கு வந்தது இங்கு நிரந்தரமாக தங்குவதற்கே, திரும்பிப்போவதற்கு அல்ல என்ற இலங்கையின் அச்சத்தை இந்தியாவின் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன என்றும் இலங்கை அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே இந்தக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(8ம் பக்கம் பார்க்க)

## "இந்தியநடவடிக்கைகளையே ஜே. வி. பி. எதிர்க்கிறது"

### ரேகண விஜயவீர அறிவிப்பு

(கொழும்பு)

"இலங்கை மீது எந்தவொரு வெளிநாட்டுச் சக்திகளின் ஆக்கிரமிப்பையும் நாட்டுப் பற்றுள்ள எவரும் அனுமதிக்க மாட்டார்கள். இந்நிலையில் எமது நாட்டில் இந்திய நடவடிக்கைகளை ஜே. வி. பி. வன்மையாக எதிர்க்கிறது."

இவ்வாறு ஜே. வி. பி. இயக்கத் தலைவர் ரேகண விஜயவீரா தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி, தனது 24வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ரேகண விஜயவீராவின் கையெழுத்திட்ட துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது. அப்பிரசுரத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்,

அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

(7-ம் பககம் பார்க்க)

### சஞுவல 3 மாணவர்களுக்கு மரண தண்டனை!

(பீக்கிங்)

சீன மாணவர் ஜனநாயகப் போராட்டத்தின்போது ரயில்எரிப்பு இராணுவ அதிகாரிகள் மீது தாக்குதல் போன்ற குற்றம்சாட்டப்பட்டமூன்று மாணவர் தலைவர்களுக்கு சீன அரசு மரண தண்டனை விதித்ததுள்ளது.

## ஆறு 'ஈரோஸ்' உறுப்பினர்கள் வவுனியாவில் சடலமாக மீட்பு!

### பாலகுமாரன் அடையாளம் காட்டினார்

(வவுனியா)

'ஈரோஸ்' இயக்க உறுப்பினர்கள் ஆறுபேரின் சடலங்கள் கைகளும் வாயும் கட்டப்பட்ட நிலையில் வவுனியாவில் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியாக்குளம், ஆலகரை என்னுமிடத்தில் உமியினால் மூடப்பட்ட நிலையில் கிடந்த இந்த சடலங்களைக் கண்ட இப்பகுதி மக்கள் பொலிசாருக்கு தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து இச்சடலங்கள் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

வவுனியா ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த 'ஈரோஸ்' மத்திய குழு உறுப்பினரான திரு. வே. பாலகுமாரன் சடலங்களை அடையாளம் காட்டினார்.

நாகலிங்கம் வன்னன் (22 வயது), இராமச்சந்திரன் ரமணன் (24 வயது), வேலா

(7-ம் பக்கம் பார்க்க)

## சென்னையில் ராஜீவ்

(சென்னை)

இலங்கையிலுள்ள இந்தியர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டியது இலங்கை அரசின் பொறுப்பே என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஜே. வி. பி. இயக்கம் மேற்கொண்டுள்ள இந்தியர் எதிர்ப்பு நடவடிக்கைகள்

(7ம் பக்கம் பார்க்க)

## மாணவர்களின் பாதுகாப்புக்கு மாகாணசபை உத்தரவாதம்!

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் பாதுகாப்பிற்கும், அவர்கள் எவ்வித இடையூறுமின்றி கல்விபயில்வதற்கும வடக்கு - கிழக்கு மாகாணசபை உத்தரவாதமளிக்கும் என்று யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஆ. முருகநேசன் தெரிவித்துள்ளார்.

பரீட்சை நடைபெறும் சமயங்களில் சுற்றிவளைப்பு, ஊரடங்குச் சட்டம் போன்றவற்

(8-ம் பக்கம் பார்க்க)

## விரிவுரைகள் நடைபெற்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று விரிவுரைகள் நடைபெற்றன.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியிலும் விரிவுரைகள் நடைபெற்றன, ஆயினும் மாணவர்களின் வரவு குறைவாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சாவகச்சேரி பகுதியில் பாடசாலைகள் சில இயங்கியதாக கல்வித்திணைக்கள குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

## இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி தச்சன்தோப்புப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள இளைஞர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியவிமானத்தைகடத்த தொலைபேசியில் மிரட்டல்!

### கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விசேட பாதுகாப்பு

[கொழும்பு]

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியன் விமானம் ஒன்றை கடத்தப்போவதாகக் கிடைத்த தொலைபேசி மிரட்டலைத் தொடர்ந்தே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோல் கடந்த செவ் [illegible] செல்லும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தை கடத்தப்போவதாக மிரட்டல் வந்தபோதிலும் எதுவித அசம்பாவிதமும் இல்லாமல் விமானம் புறப்

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் இரு சடலங்கள் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டன.

வன்னேரிக்குளத்தைச் சேர்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய தமிழ் மொழிப் பயிற்சி ஆண்டு 5 புலமைப் பரிசில் விசேட சித்திக்கு வழி காட்டி. வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (சி. 2950)

இறக்குமதியாக விருக்கும் (Holland, OR, U. K) விதை உருளைக் கிழங்கு தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி–2931)

பதனிடப்பட்ட பம்பாய் வெங்காய விதை (Country of Origin Holland) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். கிளை; மல்லிகா ஸ்டோர், மாங்குளம். சி–2947

வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட நீரழிவு வியாதிகளுக்கு உகந்த வறுத்த கோதுமை அரிசிக் குறுணல், வறுத்த கோதுமை, றவை, கோதுமை அரிசியில் அரைத்த ஆட்டாமா எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. 777, K. K. S. Rd. & 208, 1st Cross St. Jaffna. சி-2929

### தவறிவிட்டது

14-6-89 அன்று அந்தோனிப்பிள்ளை உதயகுமார் என்பவருக்குச் சொந்தமான பாஸ்போட்டுக்குத் தேவையான ஆவணங்கள் யாழ்.நகர்ப் பகுதிக்குள் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். S. அந்தோனிப்பிள்ளை (C. T. B) சாரதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை சி-2961

### தேவை

குரோசறி பொருட்கள் வியாபாரத்தில் அனுபவம் உடைய இருவர் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்: சரிதா ஜுவல்லர்ஸ், இலக்கம் 7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி-2967

தொண்டு மனப்பான்மையுடைய நிரந்தரமாக இருந்து பணியாற்றக்கூடிய இரு உதவி மேற்பார்வையாளர்கள் தேவை. 19-6-89 காலை 9-00 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும். உணவு, உடை தங்குமிடம் வழங்கப்படும். நிர்வாகச்செயலாளர், சைவச் சிறுவர் இல்லம், கைதடி. சி-2957

யாழ். நகரில் உத்தியோகம் பார்க்கும் ஒருவருக்கு இப்பகுதிக்குள் சகல வசதிகளுடன் அறை வாடகைக்கு தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம் C 2962, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். சி–2962

### பரீட்சை

SLAS பரீட்சைக்குரிய நுண்ணறிவு (பொதுவுளச் சார்பு), கிரகித்தல் ஆகிய புதிய நூல்கள் வெளிவந்துவிட்டன. விடய ஆய்வு விரைவில் வெளிவரும். க. குணராசா, SLAS ஸ்ரீலங்கா புத்தகசாலை/பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். சி–2933

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (இரண்டாவது) 18-06-89 ஞாயிறு 3-00 மணிக்கு நடைபெறும். மேற்படி பரீட்சை சம்பந்தமான வினாவிடை வகுப்பு சனி, ஞாயிறு 10.30 மணிக்கும் புதன் 3-30 மணிக்கும் நடைபெறுகின்றன. ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, யாழ்ப்பாணம். சி–2955


# பெண் நெசவாளர் தேவை

மாதவருமானம் ரூ. 1000க்குமேல். தங்குமிடம் சகல வசதிகளுடன் இலவசம்.

மின் தறியில் தேர்ச்சி பெற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

புதிதாக பயிற்சி பெற விரும்புவோருக்கும் சகல தங்குமிட வசதிகளும் உண்டு. அவர்களுக்கு மாதம் ரூபா 400 ஊதியமாக வழங்கப்படும். 19-6-89 அல்லது 20-06-89 காலை 8 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

**சீமா சில்க் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்.**

பலாலி வீதி, திருநெல்வேலி.

(அரசாங்க விவசாய பாடசாலைக்கு அண்மையில்)

[சி 2966]


## கட்டடவேலை தாமதம்

(பலாலி)

அச்சுவேலி நவீன சந்தைக் கட்டடம் கட்டுவதற்கென 7 லட்சம் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டும் இதுவரை கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நிறுத்தப்பட்டிருக்கும் தூண்மட்டும்தான் தொடர்ந்தும் காட்சியளிக்கிறது.

## பண்டத்தரிப்பில் மா தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புப் பகுதியில் மாவுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் மா கையிருப்பில் இல்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. தனியார்கடைகளிலும் மா கையிருப்பில் இல்லாதிருப்பதால் மக்கள் மிகுந்த கஷ்டமடைகின்றார்கள்.

இதேவேளை, பண்டத்தரிப்புப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாண் பேக்கரியில் பாண் விநியோகம் சீராக முறையில் நடைபெற்றுவருகின்றது. கையிருப்பில் இருக்கும் மா முடிவடையும்வரை பாண் உற்பத்தியும், விநியோகமும் நடைபெறுமென்றும் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில தனியார் கடைகளில் மாவைப் பதுக்கிவைத்துக் கூடிய விலைக்கு விற்றுக் கொள்ளைலாபம் அடிப்பதாகவும் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

## பதவி உயர்வு: நால்வர் மட்டுமே தமிழர்கள்

[பண்டத்தரிப்பு]

அண்மையில் பொது சுகாதாரப் பரிசோதகர்களிலிருந்து உணவு, மருந்துவகைப் பரிசோதகர்களாகப் பதவிஉயர்வு பெற்ற 22 பேரில் நாலு பேர் மாத்திரம் தமிழர்கள் என்று அறியப்படுகின்றது.

காங்கேசன்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. ரி. மகாதேவன், கோண்டாவில் பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். தங்கத்துரை, கல்முனை பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். நாகையா, நிலாவெளி பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. என். பரமேஸ்வரன் ஆகியோரே உணவு, மருந்துவகைப் பரிசோதகர்கள் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுக்கான மூன்று மாதப் பயிற்சி கொழும்பில் இம்மாதம் 19ம் திகதி ஆரம்பமாகுமென்று அறியப்படுகின்றது. கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

## காட்டுமரம் தீக்கிரை

(ஒட்டுசுட்டான்.)

காட்டிலுள்ள மரத்தை அனுமதியின்றி ஏற்றிச்சென்ற லொறி இனந்தெரியாதவர்களினால் தீக்கிரையாக்கப்பட்டது.

இச்சம்பவம்மாங்குளத்திற்கு அண்மையில் இடம்பெற்றது.

## பணிப்புரை

[சுன்னாகம்]

1990 ஜனவரி தொடக்கம் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் அங்கீகரிக்கட்ட எண்ணிக்கைக்கு மேலாக வசதிகள் சேவைகள் கட்டண நிதி பெறும் ஆசிரியர்களையும், பாடசாலை அபிவிருத்திச்சங்க நிதியின் மூலமான ஆசிரியர்களையும் நியமிக்கக்கூடாது என யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் யாழ். மாவட்டத்திலியங்கும் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாக அறியப்படுகிறது.

## சித்திரத் தேர் அச்சேற்று விழா

[வளர்காவற்றுறை]

சரவணை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவிலுக்குப் பல லட்ச ரூபா செலவில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் சித்திரத் தேருக்கான அச்சு ஏற்று விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

## பதவி உயர்வு

[பூநகரி]

கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. மார்க்கண்டு வடக்கு–கிழக்கு மாகாண சபையின்கீழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பதவியேற்றுள்ளதால் அங்கு கடமையாற்றிய சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் திரு. முருகேசு குமாரதாசன் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

## புதிய மண்டபம்

[பலாலி]

கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயம் புனரமைக்கப்பட்டுவருகிறது.

ஆலயத்தைச் சுற்றிச் சுற்று மதில் கட்டப்பட்டுள்ளது. முன்னர் இருந்த கோவிலின் முன் பக்க மண்டபங்கள் இடிக்கப்பட்டுப் புதிய வடிவில் மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## நியமனம்

(வேலணை)

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் வேலணை கொத்தணி பாடசாலைகளினது அதிபராகவும் இருந்த திரு. க. சண்முகநாதன் இம்மாதம் முதல் வேலணை கோட்டக்கல்விஅலுவலக கல்விநிர்வாகப்பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார்.


## மானிப்பாயில் "கற்பகம்"

பனம் பொருள் உற்பத்திகள் மற்றும் பிரதேச உற்பத்திப் பொருட்களை மானிப்பாய்ப் பகுதி மக்களும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கு வசதியாகப் பனை அபிவிருத்திச்சபை பின்வரும் முகவரியில் இன்றுதொடக்கம் ஒரு ''கற்பகம்'' விற்பனை நிலையத்தை ஆரம்பித்து வைக்கின்றது.

**"கற்பகம்"** (சந்தைக்கு அருகில்)

பிரதான வீதி, மானிப்பாய்.

[ஏ 287]

## வெளிவந்துவிட்டன

நாவலர் நமக்களித்த கலைக்களஞ்சியங்கள் சைவ பரிபாலன சபையின் நூற்றாண்டு வெளியீடுகளாக வெளிவந்து விட்டன.

சைவ வினாவிடை (முதலாம் புத்தகம்)

இலக்கணச் சுருக்கம் (மூன்றம் பதிப்பு)

ஆசிரியர், மாணாக்கர், சமய அபிமானிகள், மொழியறிவின் முட்டறுத்து மொழிபயிலும் ஆர்வமுள்ளோர் அனைவருக்கும் பயன்தரும் பழம்பெரும் நூல்கள் புதிய பதிப்பில் உங்களுக்கு கிடைக்குமிடம்.

**சைவப்பிரகாச அச்சியந்திரசாலை**

450, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம். (சி 2954)

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

**ஆரம்பம்: 24 - 6 - 89 (சனி, ஞாயிறு) வகுப்புகள்**

**பயிற்சிக்காலம்: 3 மாதம்**

சேரும்போது செலுத்தவேண்டியது ₹500 மாத்திரம். O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப்பயிற்சி. IBM (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். குறிப்பிட்ட தொகை மாணவ, மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தை பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 23 - 6 - 89.**

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, மின்சாரநிலைய வீதி, [2-ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம்.

(உப தபாற்கந்தோர் அருகாமை) (எ-285)

## மக்கள் வங்கி அறிவித்தல்

# அடைவு நகைகளுக்குப் பணம் செலுத்துதல்

அடைவு நகைகளை மீளப்பெறுவதற்கு மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டிருந்த, 1984-01-01 முதல் 1987-12-31 வரையிலான காலப்பகுதிக்கு வருடம் ஒன்றுக்கு 15% வட்டியைச் செலுத்தும் சலுகை எதிர்வரும் 1989-06-30ம் திகதியுடன் முடிவடைகின்றபடியால், இதுவரை காலமும் பணத்தைச் செலுத்தத் தவறியவர்கள், இச்சலுகையைப்பாவித்து1989-06-29ம் திகதிக்கு முன்னர் பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

1989-06-30ம் திகதி வங்கி விடுமுறை தினமாகும்.

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி.
பிரதேச தலைமையலுவலகம்,
யாழ்ப்பாணம். (ஏ 284)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "உலகிலிருந்து அடுத்த நாற்பது ஆண்டுகளில் கம்யூனிஸம் அடியோடு மறையும்" சேர் றெனல்ட் றேகன் உரை

(லண்டன்)

"அடுத்த நாற்பது ஆண்டுகளில் உலகிலிருந்து கம்யூனிஸம் அடியோடு மறைந்துவிடும். இதற்கான ஆரம்பமே தற்போது சீன மாணவர் ஜனநாயகப் போராட்டம்" என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி சேர். றெனல்ட் றேகன் லண்டனில் தெரிவித்துள்ளார்.

லண்டனில் நேற்று முன்தினம் திரு. றெனல்ட் றேகனுக்கு எலிசபெத் மகாராணியார் 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தபோது நன்றி தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். திரு. றேகன் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

தற்போதைய உலகிற்கு கம்யூனிஸம் பொருத்தமற்றதாகி வருகிறது. இதனை ஏற்கும் மக்களின் தொகையும் குறைந்துவருகிறது. அடுத்த 40 வருடங்களில் உலகிலிருந்து கம்யூனிஸம் அடியோடு மறைந்துவிடும். சீனாவில் நடைபெறும் மாணவர் ஆர்ப்பாட்டம்போல் போலந்து, ஹங்கேரியிலும் இடம்பெற்று வருகிறது. இதனை அந்தந்த நாடுகள் தாக்குப்பிடிக்க முடியாது திண்டாடுகின்றன.

உலகில் தகவல் தொடர்பு சாதனங்களினதும், பத்திரிகையாளர்களினதும் பணிகள் மிக முக்கியமானது. அவர்களது திறமையாலேயேஇன்று சீனாவில் நடைபெறும் பல சம்பவங்கள் வெளி உலகிற்குத் தெரியவருகிறது.

உலகில் கம்யூனிஸம் இல்லாது போனால் நேட்டோ அமைப்பின் தேவையும் இல்லாது போகும் என்றார்.

திரு. றேகன் தமது ஒருமணிநேர உரையில் பல தடவைகள் கம்யூனிஸத்தைக்கண்டித்துப் பேசினார். எனினும் சோவியத் அதிபர் திரு. மிகையில் கொர்பச்சேவின் புதிய மறுமலர்ச்சித் திட்டங்களையும் திரு. றேகன் வெகுவாகப் பாராட்டினார்.

## உலக வலம்

### சத்தியசாயிபாபாவின் அற்புதம்:

## அழகிய கிருஷ்ணனாக மாறிய கருங்கல்

(ஹைதராபாத்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் அற்புதங்களைப் பார்த்தவர்கள், கேட்டவர்கள் பலர். அவ்வாறு அண்மையில் பாபாவின் கையிலிருந்த ஓர் கருங்கல் அழகிய கிருஷ்ணன் உருவாக மாறிய சம்பவம் புட்டபத்தியிலுள்ள அவரது ஆசிரமத்தில் நிகழ்ந்துள்ளது.

பாபாவின் தரிசனத்துக்காக வந்திருந்த ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழக பூமியியல் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் கே. ராவ்விடம், பாபா ஒரு கருங்கல்லைக் கொடுத்து இதில் என்ன இருக்கிறது என்று வினவினார்.

ராவோ மிக அவதானமாக பரிசோதித்துவிட்டு மூலக்கூறுகள், அணுக்கள், எலக்ரோன்கள், ப்ரோடான்கள் இருப்பதாக கூறினார். பாபாவோ, நான் இதை ஆழமாக கேட்கிறேன் என்றதும், சாமி எனக்குத் தெரியவில்லையென மொழிந்ததுதான் தாமதம், பாபா அக் கல்லை வாங்கி வாயால் ஊதினார்.

அந்த கரடுமுரடான கருங் கல்லோ அழகான வேணுகோபாலனாக உருமாறியது. வர்ணமும் மாறிற்று. மூலப் பொருள்களின் அமைப்பும் மாறிவிட்டதாக பேராசிரியருக்கு தெரிந்தது. "பார்த்தீங்களா? உங்களுடைய மூலக்கூற்றுக்கும் அணுவுக்கும் அப்பால் ஈசுவரனே கல்லில் இருக்கிறான். அவன் இனிமையும், இன்பமும் உருவானவன். பாதத்தை சுவைத்துப் பாருங்கள்" என்றார் பாபா. "கருங்கல்லை சுவைத்துப் பார்க்கையில் அது கற்கண்டு எனக் கண்டுகொண்டார்! கிருஸ்ண விக்கிரகம் முழுவதும் கற்கண்டாகத்தான் ஆகியிருந்தது.

### பாராளுமன்ற பதவியால்

## ஜெயலலிதா-குழந்தைவேலு கருத்து முரண்பாடு!

(சென்னை)

அ.தி.மு.க. (ஜெயலலிதா) அணி நாடாளுமன்ற உறுப்பினர் குழந்தைவேலு, பாராளுமன்றப் பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றிருப்பது கட்சித் தலைவி ஜெயலலிதாவுக்கும், குழந்தைவேலுக்குமிடையில் கருத்து முரண்பாடுகளை உருவாக்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"சபாநாயகர் பல்ராம் ஜாக்கர் வழங்கிய பொதுக் கணக்குக் குழுத் தலைவர் பதவியை குழந்தைவேலு ஏற்றுக்கொண்டிருக்கக் கூடாதென்று ஜெயலலிதா கருதுகிறார் எனவும், இப்பதவியைக் குழந்தைவேலு ஏற்றுக்கொண்டதன் மூலம் அ.தி.மு.க. என்பது பதவிப் பித்தர்களின் குழு என்ற கெட்ட பெயரைச் சம்பாதித்து விட்டார்" எனவும் ஜெயலலிதா குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளையில், கட்சி மாறுவதற்காக ஐந்து லட்ச ரூபாவைக் கொடுத்ததாகப் பாராளுமன்றத்திலே குற்றஞ் சாட்டப்பட்ட குழந்தைவேலுவை எப்படி ஊழல்களை ஆய்வுசெய்கின்ற குழுவின் தலைவராக நியமிக்கலாமென பாராளுமன்றத்தில் சர்ச்சைகள் நடைபெற்றுள்ளன. இந்தக் குழுவின் தலைவராக அ.தி.மு.க.வைச் சேர்ந்த குழந்தைவேலுவை எப்படி நியமிக்கலாமென எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழுவிலிருந்தே இராஜினாமாச் செய்துள்ளனர்.

சபாநாயகர் பல்ராம் ஜாக்கர் மீது சுமத்தப்பட்ட "பாடர் மெஷின்" இறக்குமதி ஊழல் குற்றச்சாட்டை முதலில் விசாரித்த குழந்தைவேலு தலைமையிலான குழு சபாநாயகருக்கும் அவ்வூழலுக்கும் சம்பந்தமில்லையெனத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதிலிருந்து தப்புவதற்காகவே சபாநாயகர், காங்கிரஸுடன் உறவாடும் அ.தி.மு.க.வுக்கு இப்பதவி வழங்கப்பட்டதாக எதிர்க்கட்சி குற்றம்சாட்டியிருக்கின்றது. (ச)

### சீனாவிலிருந்து

## அமெரிக்க பத்திரிகையாளர் இருவர் நாடுகடத்தப்பட்டனர்

(பீக்கிங்)

சீனாவுல் செய்திகள் வெளியிடுவது தொடர்பாக இராணுவம் விதித்த சட்டதிட்டங்களை மீறிய இரு அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இதே வேளை இவ்வாறான குற்றச்சாட்டின்பேரில் பி. பி. சி. பத்திரிகையாளர் இருவர் நாட்டைவிட்டு வெளியேறுவது தடுக்கப்பட்டுள்ளது.

சீனாவில் இடம்பெற்றுவரும் மாணவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள்பற்றிய செய்திகளை இராணுவச் சட்டத்தையும் மீறி வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் 'வொய்ஸ் ஓப் அமெரிக்கா' 'அசோசியேற்றட் பிறஸ்' (ஏ. பி.) நிறுவனங்களைச் சேர்ந்த இருவரே நாடுகடத்தப்பட்டனர்.

மற்றொரு சம்பவத்திற்காக பி. பி. சி. தொலைக்காட்சி சேவைப் படப்பிடிப்பாளர்இருவர் சீனாவை விட்டு வெளியேறக்கூடாதென்றும் பணிக்கப்பட்டுள்ளனர். தற்போது சீனாவில் இராணுவம் பத்திரிகையாளர், தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளையும் கண்காணிப்பையும் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

### அமெரிக்க அதிபர் புஷ்சைவிட

## கொர்பச்சேவை விரும்பும் மே. ஜேர்மன் மக்கள்

(பொன்)

"அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்சை விட தாம் சோவியத் அதிபர் திரு. மிகையில் கொர்பச்சேவ்வையே அதிகம் விரும்புவதாக மேற்கு ஜேர்மன் மக்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

மேற்கு ஜேர்மனியில் நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் சோவியத் அதிபர் திரு. மிகையில் கொர்பச்சேவ் நேற்று முன்தினம் பொன் நகரில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றபோது வீதியெங்கும் குழுமி நின்று ஆயிரக்கணக்கான மக்கள் இவருக்கு பெரும் வரவேற்பளித்தனர்.

இதன்போது திரு. கொர்பச்சேவ் தம்பதிகள் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கருத்தில் கொள்ளாது மக்களுடன் அளவளாவி பல 'ஓட்டோ கிராப்பிலும்' கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சி மே. ஜேர்மன் மக்கள் மத்தியில் திரு. கொர்பச்சேவிற்கு இருந்த மதிப்பை பெருமளவில் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை மே. ஜேர்மன் அதிபர் திரு. ஹெல்மட் ஹோலுடன் திரு. கொர்பச்சேவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க சார்பு 'நேட்டோ' அமைப்பில் உள்ள 16 நாடுகளில் [illegible] கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

### கடத்தல், கொலை, கைதை எதிர்த்து

## பல்கலைக்கழக மாணவர் நடத்திய ஊர்வலம்

(கொழும்பு)

மாணவர் கடத்தல், கைது, பாடசாலைகள் மூடப்பட்டிருத்தல் மற்றும் கொலைகளைக் கண்டித்து 2000க்கும் அதிகமான பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியுள்ளனர்.

இவ்வூர்வலம் சுமார் மூன்று மைல் தூரம் இடம்பெற்றதாகவும், இதில் அப்பகுதிகளைச் சேர்ந்த பல பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தென் பகுதியில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட பல மாணவர்கள் தற்போது விடுதலைசெய்யப்பட்டு வருவதாக அண்மையில் அநுராதபுரத்தில்கைதான 7மாணவர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### இ. போ. ச. ஊழியர் வேலை நிறுத்தம்

## தென் பகுதி பஸ்சேவையை இராணுவம் நடத்துகிறது

(கொழும்பு)

தென் பகுதியில் கடந்த சில தினங்களாக இ. போ. ச பஸ்களை இராணுவத்தினர்சேவையில் ஈடுபடுத்திவருவதாகத் தெரியவருகிறது.

கடந்த நான்கு நாட்களாக

(5-ம் பக்கம் பார்க்க)

### கொழும்புத்துறை

## இந்து மகா வித்தியாலயத்தை கொத்தணி தலைமைப் பாடசாலையாக்குக"

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தை கொத் [illegible] யாக ஆக்கும்படி அகில [illegible] சங்கம் யாழ். மாவட்ட பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியிலுள்ள இப்பாடசாலையின் தோற்றமும், முன்னேற்றமும் இந்துக்களின் பாரம்பரியத்துடன் தொடர்பு கொண்டது. இப்பகுதியில்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எது வாழ்கிறதோ அது சத்தியம். சத்தியம் ஒருபோதும் மடிவதில்லை. எது வெல்கிறதோ அதுசத்தியம், சத்தியம் ஒருபோதும் தோற்பதில்லை.

— ஸ்ரீ ஓங்காரஜி,

## நமது நோக்கு

# அம்'மா' வரவில்லை; அதனால் இந்த விலை!

எதிர்பார்த்தபடி திருகோணமலையிலிருந்து அம்'மா'-பிரிமா மா- வரவில்லை. அதனால் யாழ். நகரில் கோதுமை மாவின்விலை திடீரென அதிகரித்துவிட்டதென்று செய்திகள்கூறுகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுக்களஞ்சியங்களிலும் போதியளவு மா கையிருப்பில் இல்லை. இதனால் கூட்டுறவுச் சங்கங்களிலும் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அன்றாடம் பொருள் வாங்கி உணவு தயாரிப்பவர்கள் இதனாற் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். குறிப்பாக, உணவு முத்திரைக்குப் பொருட்கள் வாங்குவோர் பெரும்கஷ்டத்தை எதிர்நோக்குவர்.

நடந்தது என்ன? உரிய வேளையில் மாக்கப்பல்வந்து சேருமென்று உணவுத் திணைக்களம் எதிர்பார்த்தது. அதனால் போதியளவு மா வைக் கையிருப்பில் வைத்திருப்பதில் சற்றுச் சோம்பி விட்டார்களோ? எதிர்பாராதவிதமாக இத்தகைய சுணக்கங்கள் ஏற்படுமென்பதை இனிமேலாவது கவனத்திற்கெடுத்துத் திட்டங்களை வகுப்பார்கள் என்று நம்புகிறோம்.

வடகிழக்குக் கூட்டுறவு ஆணையாளர், பொதுமுகாமையாளர்கள் மகாநாட்டைக் கூட்டியிருக்கிறார். திருகோணமலை பிரிமாஆலையிலிருந்து நேரடியாகச் சென்று மா பெற்று வரும்படி அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறார். நெருக்கடி நிலையுணர்ந்து, முகாமையாளர்கள் சுறுசுறுப்பாக இயங்கி உரிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் எடுத்தால், தட்டுப்பாடு சில நாட்களில் நீங்குவிடுமென்பது திண்ணம்.

''நல்ல தருணமடா, இதை நழுவவிடலாமோ?'' என்ற ரீதியிற் சில வியாபாரிகள் விலையை அதிகரித்து ஏற்கனவே நலிந்துள்ள பொதுமக்கள் மீது மேலும் சுமையையேற்றிவிட முற்படலாகாது. மனிதாபிமான முறையில் நடந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.

இந்த வேளையிற் பழைய பல்லவி ஒன்றைப் புதிய ராகத்தில் இசைக்க விரும்புகிறோம். சாமி, தினை, குரக்கன் போன்ற உள்ளூர் உற்பத்திகளைப் பற்றியது தான் அந்தப் பல்லவி.

இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்தபோது, நெருக்கடி நிலையால், சிறுதானிய உற்பத்திக்கு ஊக்கம் குறைந்தது. அவசர தேவைக்கென மா இறக்குமதி செய்யப்பட்டது. அம்'மா' - நல்ல சத்துள்ள கோதுமை மா -எனத்தான் பலரும் நம்பினர். ஆனால் இறுங்கு போன்ற பல வகைச் சிறுதானியங்களின் கலவை என்பது முதலிற் பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைத்தான்.

எனினும் செவிலித்தாய் போன்ற அம்'மா'விற் பலவகைஉணவுவகைகளைத் தயாரித்து உண்ணப் பழகிவிட்டோம். மனிதன் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டதால், மீட்டெடுப்பது சுலபமானதல்ல என்ற சித்தாந்தம் இந்த உணவுப் பழக்கத்திலும் உண்மையாகிவிட்டது. எனவே, உள்ளூர் புன்செய் பயிர்களான குரக்கன், தினை, சாமி போன்ற சிறுதானிய உற்பத்தியை மறந்துவிடாமல் இவற்றை விதைத்து, வெட்டி, மாவாக்குவதில் ஏற்படும் சிரமங்கள்தான் எம் கண்முன்னே தோன்றுமே தவிர இதன் பின்னணியிலுள்ள பொருளாதாரச் சித்தாத்தங்களை எண்ணுவோர் யார்?

பிறநாட்டவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்து, நாம் பெற்று உண்ணும் மாவை உண்டு கொண்டு வேலைவாய்ப்பில்லையே என்று ஏங்கும் மக்களைப் பார்த்துத்தான் 'அவள்' சிரிக்கிறாளாம்.

யாரவள்? வள்ளுவரே கூறுகிறார்.

''இலமென்று அசையிருப் பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்''

தன்னைப் பண்படுத்தி, உள்ளூர் உற்பத்தியைப் பெருக்காது, சோம்பியிருப்பாரைப்பார்த்துத் தான் 'அம்மா'வை நம்பியிருப்பாரைப் பார்த்து பூமித்தாய் சிரிக்கிறாளோ?

# கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் ராஜினமா?

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் பலர் தமது பதவிகளை ராஜினமாச் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. இதற்கான பதவி விலகற் கடிதங்களையும் அவர்கள் சமர்ப்பித்துள்ளனராம்.

இவர்களது பதவி விலகல்களுக்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லையாயினும் இவர்களது ராஜினமாக்களை ஏற்கப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிகார தயக்கம் காட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தமது பதவி விலகலுக்கான காரணங்களைக் கடிதங்களில் குறிப்பிட்டுள்ள போதிலும் இந்த விபரங்களைப் பேராசிரியர் அலுவிகார வெளியிடவில்லை.

## ஓய்வு பெற்றார்

(பலாலி)

தெல்லிப்பழை சுகாதார வைத்தியர் அலுவலகத்தில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. [illegible] ராசா தமது 36 வருட சேவையைப் பூர்த்திசெய்து ஓய்வு பெற்றுள்ளார்.

# பல்கலைக்கழக ஒருங்கிணைப்பு குழுவின் கோரிக்கைகள்

[யாழ்ப்பாணம்]

''எந்த ஒரு கல்வி நிறுவனத்திலுள்ளும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி ஆயுதங்கள் தாங்கிய எவரும் உட்புகலாகாது. தேவையற்ற முறையில் மாணவர்களைகைதுசெய்வதையும், துன்புறுத்துவதையும், உள ரீதியான பாதிப்புகளையும் குறைக்கும் முகமாக சகல கல்வி நிறுவனங்களுக்கும் அருகில் உள்ள ஆயுதப்படை முகாம்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும்.''

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் - ஊழியர்- மாணவர் சங்க ஒருங்கிணைப்புக் குழு, ஆசிரியர்கள், மாணவர்கள் ஊழியர்கள் பாதுகாப்புத் தொடர்பாக மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அக் கோரிக்கையில் சகல மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விக்கூட ஊழியர்கள் ஆகியோரது அடிப்படை உரிமைகள் பற்றி தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''இந்திய அமைதிப் படையோ அல்லது ஆயுதம் தாங்கிய வேறு எவரோ தகவல்களைப் பெறும் பொருட்டோ அல்லது ஒரு போராளிக் குழுவின் உறுப்பினர் அல்லது ஆதரவாளர் என்ற சந்தேகத்தின்பேரிலோ மேற் கூறப்பட்டவர்களைக் கைதுசெய்தல் ஆகாது.

யாராவது ஆயுதங்கள் தாங்கிய நிலையில் அல்லது ஆயுதங்கள் வைத்திருப்பதற்காக கைது செய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட கல்விக்கூடத்தில் அதிபருக்கோ அல்லது பிரதி கல்விப்பணிப்பாளருக்கோ அல்லது உபவேந்தருக்கோ 24 மணித்தியாலத்திற்குள் அறிவிக்கப்படவேண்டும். கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள் தெரியப்படுத்தப்படவேண்டும். கைதுசெய்யப்பட்ட இடமும், கைதுசெய்யப்பட்டவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடமும் அறிவிக்கப்படவேண்டும். பெற்றோரும் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவன அதிகாரிகளும் கைதுசெய்யப்பட்டவரை தினசரி சந்திக்க அனுமதிக்கப்படவேண்டும். தடுத்துவைக்கப்பட்டவர்மீது எதுவித உடல், உள ரீதியில் சித்திரவதைகள் மேற் கொள்ளப்படக்கூடாது. விசாரணைகள் எதுவும் நடைபெறவேண்டுமானால் அவை 48 மணித்தியாலங்களுக்குள் முடிவடைய வேண்டும். அவர் விடுவிக்கப்படும்பொழுது விடுவிக்கப்பட்டதற்கான அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படவேண்டும். கைது செய்யப்பட்டவர், சம்பந்தப்பட்ட கல்வி நிறுவன அதிகாரிகளின் முன்னிலையில் மட்டும் விடுவிக்கப்படவேண்டும். பரீட்சைகளோ அல்லது அதற்கான ஒழுங்குகளோ இராணுவமுகாமில்நடைபெறக்கூடாது. பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கூடிய விரைவில் விடுதலைசெய்யப்படவேண்டும்.

''தனியாகவோ கூட்டாகவோ ஜனநாயக ரீதியில் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான உரிமை எவ்விதத்திலும் தடை செய்யப்படக்கூடாது. சிவில் நிர்வாகம் சரிவர இயங்காதநிலையில் மேற்கூறப்பட்டவைகளை உத்தரவாதப்படுத்த மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

''எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் மாணவர்களையும், ஆசிரியர்களையும் மற்றோரையும் ஏதோ ஒருமட்டத்தில் செயற்படத் தூண்டும் வகையில் அமையவேண்டும்.

அவைகளைச் செயலிழந்து பிரச்னைகளுக்கு முகம்கொடுக்காது ஒதுங்கி நிற்கும் பார்வையாளர்களாக்கும் நடவடிக்கைகள் பயனற்றவை என்பது எமது கடந்தகால அனுபவம். இதற்கமைய பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்குஎமது ஆதரவு உண்டு'' என்று தெரிவிக்கப்பட்டது.

# நந்தாவில் அம்மன் தேர்த் திருவிழா

[யாழ்ப்பாணம்]

அருள்மிகு கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய (நந்தாவில் அம்மன் கோவில்) தேர்த்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும்' நீர்த்தத் திருவிழா மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது.

# ''தமிழர் பகுதி ஆலயங்கள் வரலாறு சேகரிப்பது அவசியம்''

(மட்டுவில்)

தமிழ்ப்பகுதியில் உள்ளசகல ஆலயங்களினதும் வரலாறுகள் சேகரிக்கப்படவேண்டியது அவசியம்அதில் தமிழனின் வரலாறும் இணைந்தேயிருக்கிறது. இந்த முயற்சியில் இந்நூலாசிரியர் திரு. நடராஜாவின் செயல் பாராட்டுக்குரியது.''

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் 'சந்திர மௌளீசர் தலவரலாறும் பதிகமும்' என்ற நூல் வெளியீட்டின்போது நடத்திய ஆய்வுரையில் கூறினார்.

மட்டுவில் சந்திர மௌளீசர் வித்தியாலயத்தில், கொடிகாமம் கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நூல்வெளியீட்டு விழாவில் அவர் மேலும் கூறியதாவது: இன்று நமக்கு கிடைக்கக்கூடிய தல வரலாறுகள் அனைத்தும் 300 அல்லது 400 ஆண்டுகளுக்கு உட்பட்டவையாகும்.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது ஆன்றோர் கூற்று. இக்கூற்றின்படிக்கு தலவரலாறு சேகரிக்கப்பட்டால், அதன் மூலம் அப்பகுதி தமிழன் வரலாறும் கிடைத்துவிடும்.

யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பித்து 16 ஆண்டுகள் ஆனால் ஆய்வுத்துறையில் நாம் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறோம்.

நமது பல்கலைக்கழகம்நிறைய ஆய்வுகளை நடத்தி ஆய்வுத் திரட்டுக்களைச் சேகரித்து வைத்திருந்தது. ஆனால் இப்பொழுது ஏற்பட்ட நாட்டு நிகழ்வுகளினால் அவை அழிக்கப்பட்டுவிட்டன. இது கவலை தரும் விடயம் என்றார்.

இளைப்பாறிய அதிபர் பண்டிதர் எஸ். சிவலிங்கம் ஆய்வுரை நிகழ்த்துகையில் கூறியதாவது: பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியங்கள் படைக்கப்பட்டன அன்று காரைக்கால் அம்மையார் மிகக் குறைந்த பாடல்களைப் பாடிய போதிலும், அவரை இன்றும் புலவர் வரிசையிலே வைக்கப்பட்டுள்ளார் என்றால், அவர் பக்தி இலக்கியம் படைத்ததினாலேதான் என்றார்.

புலவர் பார்வதிநாதசிவம் வெளியீட்டு உரை நிகழ்த்தினார். இளைப்பாறிய அதிபர் திரு. கந்தசாமி முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

நூலாசிரியர் திரு. ஆ. நடராஜாவை மட்டுவில் நகரில் உள்ள சந்திரமௌளீசர்

(7-ம் பக்கம் பார்க்க)

### பாரில் எங்குமே சத்தியைத் தருவாள்

கூத்தன் கூத்திடும் போதெலாம் நின்று
கூடக் கூத்திடும் கோலமு மாகி;
ஆர்த்த பிறவிமள் தோறும் நின் ஐயன்
ஐந்தொழில் இயற்றிடும் ஆக்கம் பெருக்கி
பார்தத இடமெலாம் பட்டொளி வீசிப்
பாரினில் எங்குமே சத்தியை ஊட்டி,
நேர்த்தி யாகவே நின்று நிலைப்பாள்
நீலி நாக பூஷணி அம்மாள்

— நாக. சண்முகநாதபிள்ளை.

(இன்று நயினை நாகபூஷணி அம்மாள் 12-ம் திருவிழா)

## பலதும் பத்தும்

### ஆழ்கடலில் ஆபத்தா?

சுற்றாடற் சூழல் மாசுபடுவதற்காக அமைக்கப்பட்டதுதான் 'பசுமை அமைதிச் சுற்றாடற் கழகம்' Green Reace Environmental Organisation) இதுசர்வதேச மட்டத்தில், சுற்றாடல் மாசடைதல் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது.

அண்மையில் இக்கழகம் வெளியிட்ட அறிக்கையிற் பல திடுக்கிடும் செய்திகள் வெளிவந்துள்ளன. அமெரிக்கா, சோவியத் ஆகிய நாடுகளினது கடற்படைகள் சுமார் 50 அணுவாயுதப் போர்க்கருவிகளை ஆழ் கடலில் தொலைத்து விட்டன. 1945 முதல் இற்றை வரை தொலைத்த கணக்குத்தான் இது.

இவைகளால் என்ன நடக்குமோ? யாருக்குத்தான் தெரியும்? அந்த நாடு. 'கப்சிப்'!

இதைவிட, 1945 முதல் இரண்டாயிரம் விபத்துக்கள் கடலிலே நடைபெற்றிருக்கின்றன. கப்பல்கள் ஆழ்ந்து போதல், ஒன்றோடொன்று மோதுதல் போன்ற பல சம்பவங்களிற் சுமார் 200 வரை வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக் காரணமோ? உரோமாபுரி, வாஷிங்டன் ஆகிய இடங்களிலிருந்து பல ஆண்டுகளாக ஆய்வு செய்து அறிக்கை தயாரித்தது இந்தக் கழகம். இந்த அறிக்கை கூடப் பூரணமானதல்லவாம்! ஏன்? சோவியத் போன்ற நாடுகளிலிருந்து போதியளவு தகவல்கள் கிடைக்கவில்லையாம்! கப்பற் பயணமா? கவனித்துப் போங்கள்!

வாணி --

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சட்டவிரோத சிவல்தொழிலை கைவிடுக'

(கிளிநொச்சி)

''நாட்டின் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக கடந்த காலத்தில் அரசு நிர்வாகம் சீர் கெட்டிருந்தது. இதனைப் பயன்படுத்தி சில சிவல் தொழிலாளர்கள் கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் விதி முறைகளை மீறியும், கட்டுப்படாமலும் சட்ட விரோதமான முறையில் பனையும் தென்னையும் சீவி களவாக தவறனையும் நடாத்தி வருவது எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.'' என்று வட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திரு. பா. இராஜரட்ணம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கை மேலும் கூறுவதாவது:

இச்சட்ட விரோத நடவடிக்கைகளை தொழிலாளர் கைவிட்டு, சங்கத்தின் விதிமுறைகளுக்கு அமைய தொழில் புரியவேண்டும். இதனை மீறும் தொழிலாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்துடனை முரண்பாடு உள்ள தொழிலாளர்கள் எம்மை அணுகும் பட்சத்தில் அதற்கான தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.''

## நோயாளர் அதிகரிப்பு

(பலாலி)

காங்கேசன்துறை மார்பு நோய் சிகிச்சை பிரிவில் நோயாளர் தொகை அதிகரித்துள்ளது.

கடந்த சிலமாதங்களுக்கு முன்னர் வார்ட்டுகளில் மிக குறைந்த அளவான நோயாளர்களே சிகிச்சை பெற்று வந்தனர். ஆனால் தற்பொழுது வெளிமாவட்டங்களில் இருந்தும் நோயாளர் வந்து வார்ட்டுக்களில் தங்கி இருந்து சிகிச்சை பெறுகின்றனர். அத்துடன் வெளிநோயாளர் பிரிவிலும் சிகிச்சைக்காக வரும் நோயாளர் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

## புதிய அதிபர்

(மண்டைதீவு)

மல்லாவி மகாவித்தியாலயத்தின் அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றிய திரு. ரி. சிவபாலு மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.

ஏற்கனவே இப்பிரிவில் கொத்தணி அதிபராககடமையாற்றிய திரு. ரி. துரைசிங்கம் யாழ்.கோட்டக்கல்வி அலுவலகத்தில் பிரிவுக் கல்வி அதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

## சீருடை இன்னமும் வழங்கப்படவில்லை

[பலாலி]

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்றும் சுகாதார சேவை ஊழியர்களுக்கு இவ்வருடத்துக்கான சீருடை இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் ஊழியர்கள்வெறுப்புடனும் சாதாரண உடையுனும் கடமையாற்றுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

## தபால் சேவைக்கு தனியான இடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தபால் கந்தோரிலிருந்து தற்போது தினமும் வவுனியாவிற்கு பஸ் மூலம் தபால் பொதிகள் அனுப்பப்பட்டுவருகின்றன.

பயணிகள் செல்லும் பஸ்களில் தபால் பொதிகளை வைப்பதற்கெனத் தனிப்பட்ட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் பாடல்கள ஒலிப்பதிவு நாடா நாளை சனிக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

ஆலய கலை அரங்கில் நடைபெறவுள்ள இந்த வைபவத்துக்குப் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகிப்பார். நயினை நா. வி. மு. நவரத்தினம் பாடியுள்ள பாடல்களே இந்த ஒலிப்பதிவு நாடாவில் உள்ளன.

## நவீன உபகரணங்கள் அன்பளிப்பு

(வடமராட்சி)

தேவரையாளி இந்துக் கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவுக்கு ஐக்கிய நாடுகள் சபை அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் நவீன இயந்திரசாதனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மேற்படி ஸ்தாபனத்தின் உத்தியோகத்தர் திரு. எஸ். சொலமன் அண்மையில் கல்வி அதிகாரிகள் முன்னிலையில் இந்த அன்பளிப்புகளை வழங்கினார்.

## இராசி பலன்

16-06-1989

துவாதசி பகல் 10-25 வரை, விசாகம் பின் இரவு 2-00 வரை, இராகுகாலம் 10-23 — 11-57 வரை சித்தயோகம் பிரதோஷவிரதம். நற்கருமங்கள் செய்யலாம்.

மேஷம்: பணமுடை, அதிகாரிகள் சீற்றம், காதல் தோல்வி, மனக்கஷ்டம் அதிக யோசனை.

இடபம்: தூரத்துச் செய்தி. வீட்டில் சுபகாரியம், மனமகிழ்ச்சி, தொழில்பேறு பெண் நேசம்.

மிதுனம்: ஆன்மீகநாட்டம், அமைதியானபோக்கு, பணவரவு, சகோதரஉதவி, ஆலய தரிசனம்.

கடகம்: சோகமான செய்தி, கணவர் பகை, குழப்பமடைதல், தொழில் நஷ்டம், பணக் கஷ்டம்.

சிங்கம்; நம்பிக்கைத்துரோகம், வீட்டில் கலகம், பணமூலமான கவலை, மனச்சுமை மக்களால் கஷ்டம்.

கன்னி: எண்ணங்கள் நிறைவேறும், நோய்தணியும் வேண்டப்படாத விருந்தினர் வருகை பாராட்டு.

துலாம்: சுடிதஉறவு காதல் தோல்வி, மனைவிக்குப்பிணி, கவலை,

விருச்சிகம்: கால்நடை விருத்தி, கடன்வசூல், பதவி மாற்றம் குடும்பமகிழ்ச்சி பெரியோர்ஆசி.

தனுசு: பயணங்களால் தொல்லை, பணமுடை தொழில்கேடு, குடும்பப்பிரிவு உறவினர் வருகை.

மகரம்: திருமணப்பேச்சு, தாய்வழி ஆதரவு, மங்கள காரியம், தொழில் வெற்றி, மகிழ்ச்சி.

கும்பம்: புதியஸ்தானம், கடன்வசூல், குடும்பச்சிறப்பு, தொழில்மேன்மை, தானதர்மம்.

மீனம்: கண்டிப்பு வாக்கு விரோதம், பகைத்துக்கொள்ளல், தொழில்பிணக்கு, அசௌகரியம்.

## இ. போ. ச. ஊழியர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இ. போ. ச. ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவருவதை யடுத்தே இராணுவத்தினர் பஸ்களைச் சேவையிலீடுபடுத்தி வருகிறார்கள்.

இதேவேளை இப்பகுதிகளில் தனியார் போக்குவரத்து வாகனங்கள் முழு அளவில் சேவையில் ஈடுபட்டுவருவதாகவும் தெரியவருகிறது. நாட்டில் சுமார் 500 இ. போ. ச. பஸ்களே கடந்த நான்கு நாட்களாகச் சேவையிலீடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

## கொழும்புத்துறை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழும் இந்துமக்களின் பழம் பெரும் கல்வி நிலையமான இப்பாடசாலையின்தோற்றத்திற்கு நாவலர்பெருமானும். யோகர் சுவாமிகளும், இந்துப் பெரியார்களும் ஆற்றிய பங்கு அளப்பரியது. எனவே இந்து மக்களின் பண்பாட்டுக் கல்வித்துறையில் முக்கியத்துவம் பெற்ற இப் பாடசாலையைக் கொத்தணித் தலைமைப் பாடசாலையாக ஆக்குவது அவசியம் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மனோகரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்,

## கால்நடைகள் பாதிப்பு

[மண்டைதீவு]

மண்டைதீவுக் கிராமப்பகுதியில் கடந்த சில மாத காலமாக ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக கால்நடைகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

இப்பகுதியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் மீண்டும் பரவியுள்ளது. இவ்வாரத்தில் ஐந்துக்குமேற்பட்ட கால்நடைகள் இறந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## விளையாட்டுப் போட்டி

(மண்டைதீவு)

மண்டைதீவு வான்மதி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 24-ம், 25.ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

மண்டைதீவு மாகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இப் போட்டிகளின் பரிசளிப்பு வைபவம் 25-ம் திகதி மாலை நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

## கோயிலாக்கண்டி ஊடாக மின்சாரம்வழங்க கோரிக்கை

(நாவற்குழி)

கைதடி நாவற்குழிப் பகுதிக்கு வழங்கப்பட இருக்கும் மின்சாரத்தை கோயிலாக் கண்டி மத்திய பகுதி ஊடாக வழங்குமாறு கோயிலாக்கண்டி கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு வழங்[illegible] கோயிலாக்கண்டி மத்தியில் வசிக்கும் சுமார் 50 குடும்பங்கள் பயனடையும் என மேற்படி கோரிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதற்கான கோரிக்கை மனுவை கோயிலாக்கண்டி கிராம அபிவிருத்திச் சங்கம் இலங்கை மின்சார சபையின் [illegible] மின் அத்தியட்சகருக்கும், [illegible] அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

## 'இசை, நடன, நாடகப் போட்டிகளை கோட்டக் கல்வி மட்டத்தில் நடத்தவேண்டும்'

(சுன்னுகம்)

கோப்பாய் மானிப்பாய் ஆகிய கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த கொத்தணி அதிபர்களின் கூட்டம் மருதனுமடம் கோட்டக்கல்வி அலுவலகத்தில் கோட்டக்கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரன் தலைமையில் நடைபெற்றது.

கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரிகள், உயர் அதிகாரிகள், கொத்தணி அதிபர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் முடிவெடுக்கப்பட்டது.

ஆசிரிய இடமாற்றங்கள் அமுலாகும்போது கொத்தணிக்குள்ளும், ஒரு கொத்தணியிலிருந்து இன்னொரு கொத்தணிக்கும் மேற்கொள்ளப்படும், மனிதாபிமான காரணங்கள் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக கோட்டத்திற்கு வெளியே இடமாற்றங்கள் நடைபெறமாட்டாது.

இசை, நடன, நாடகப் போட்டியை கோட்டக்கல்வி மட்டத்தில் நடத்துதல். அண்மையில் அமுலாகியுள்ள இலவசமதியபோசனத்திட்டத்தில் மாணவர்களின் நன்மை கருதி சிறப்பாகச் செயலாற்றவேண்டும். இத் திட்டத்தை சரியாக அமுல் செய்யாதவர்கள் மீது கட்டாயமாக கடும் நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.

## விவசாயிகள் கவலை

(பலாலி)

செத்தல் மிளகாயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதையடுத்து மிளகாய்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

செத்தல்மிளகாய் கிலோ 40 ரூபாவுக்கே இப்போது விற்பனைசெய்யமுடிகிறது.

## இடமாற்றம்

(மண்டைதீவு)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கிண்ணியா பிரதேச சபை அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. தி. பிரதாபன் வேலணைப் பிரதேச சபையின் மண்டைதீவு உபஅலுவலகத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

## ஆலயங்கள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சிவன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ அப்பாசாமிக் குருக்கள் வாழ்த்தினார்.

பல ஆண்டுகளாகக் கும்பாபிஷேகம் செய்யப்படாமலிருக்கும் இப்புராதன ஆலயம்விரைவில் கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும் என்றும் சகலரும் பிரார்த்தித்துக் கொண்டனர்.

இந்நூலாசிரியர் திரு.ஆ.நடராஜா நன்றி கூறினார்.

## வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

தும்பளை அருள்மிகு நெல்லண்டை தோட்டக்கடவை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த வெளிமடை உற்சவமும், பொங்கல் விழாவும் எதிர் வரும் 24ம்திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலய வருடாந்தப் பொங்கல் விழாவும் இம்மாதம் 22ம் திகதி நடைபெறுமென ஆலய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.


## "குவைத் நாட்டுக்கு உடனடி வேலைவாய்ப்பு"

## VACANCIES IN KUWAIT

| CATEGORY | SALARY |
|---|---|
| 1. Female Cleaners | KD 25 |
| 2. Aluminium Fitters | KD 75 |
| 3. AirPort Porters | KD 50 |
| 4. Black Smith (பூட்டுவேலை) | KD 75 |
| 5. Diesel Mechanics (Hvy Veh) | KD 80 |
| 6. Mechanic Asst | KD 65 |
| 7. Painter | KD 65 |
| 8. Hammer Smith (Denter) | KD 75 |
| 9. Auto Electrician | KD 75 |
| 10. Tyre Man | KD 55 |
| 11. Steel Fixer | KD 65 |
| 12. Pipe Fitter (Clay) | KD 65 |
| 13. Masons (Tile, Brick) | KD 65 |
| 14. Kuwait Licence Hvdriver | KD 95 |
| 15. Heavy Eqp Operator | KD 100 |

### VACANCIES IN OMAN

| | |
|---|---|
| 1. Machinery Salesman | RO 150 |
| 2. Office Clerk (Male) | RO 70 |
| 3. Henna Designer | 70 |
| 4. Embrodery Tailors | 70 |
| 5. Ladies Dress Tailors | 70 |

## Vacancies In Saudi Arabia

CLEANERS — SR 350

சகல தரப்பினருக்கும் எம்மிடம் வேலை வாய்ப்பு உண்டு. பாஸ்போட், 6 படம், அனுபவச் சான்றுடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். எக்காரணத்தைக் கொண்டும் முற்பணம் அறவிடப்படமாட்டாது:

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**T. V. Travels**

Brown Road, Kokuvil.

(ஏ 286)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு நகைகள் மீளளிப்பு

[யாழ்ப்பாணம்]

மன்னார் மக்கள் வங்கியில் நகை அடகுவைத்தவர்களுக்கு மீளளிப்பு, அடுத்த வாரமளவில் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி நகைகள் எந்நேரமும் கொழும்பிலிருந்துமன்னாருக்கு எடுத்துச்செல்லப்படலாமென்றும் மக்கள் வங்கி அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

இதேநேரத்தில், யாழ். குடாநாட்டிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் இரண்டு வாரத்திற்குள் அடகு நகைகள் மீளளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, நவீன சந்தை, கன்னாதிட்டி, சங்கானை, ஊர்காவற்றுறை, சுன்னாகம், சாங்கேசன்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளிலேயே இரு வாரத்திற்குள் இந்த நகைகள் வழங்கப்படவுள்ளன.

பரந்தன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், வவுனியா, நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள், அடகு நகைகளை எடுப்பதற்காக கொழும்பு சென்றுள்ளனர்.

ஊர்காவற்றுறை வங்கியில் அடகு வைத்தவர்களுக்கு யாழ்ப்பாணத்திலும், வல்வெட்டித்துறையில் அடகு வைத்தவர்களுக்கு நெல்லியடியிலும் நகைகள் மீளளிப்புச் செய்யப்படும்.

இது இவ்வாறிருக்க, அடகு வைத்தவர்கள் நகைகள் மீட்பதற்காக வங்கியினால் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 15 சதவீத வட்டித் திட்டம் இம்மாதம் 30ந் திகதியுடன் முடிவடைகிறது.

இந்தத் திகதிக்குள் பணம் செலுத்தி, நகைகளை மீட்குமாறு வடபிரதேச முகாமையாளர் திரு. எஸ். சுப்பிரமணியம் அடகு வைத்தவர்களைக் கேட்டுள்ளார்.

## பாடசாலைக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை கணேச வித்தியாலயத்திற்குப் பாடசாலையின் நலன் விரும்பிகளில் ஒருவர் மின்சார வசதிசெய்து அன்பளிப்புச் செய்துள்ளார்.

வேலணையைச் சேர்ந்த திரு. நவரத்தினம் கேசுநாதன் என்பவரே பல ஆயிரக்கணக்கான ரூபா செலவில் இந்த மின்வசதியைச் செய்து அன்பளித்துள்ளார். இதேவேளை நாரந்தனையைச் சேர்ந்த திரு. மயில்வாகம் முத்தையா பெருந்தொகையான நூல்களையும் இப்பாடசாலைக்கு வழங்கியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற வைபவமொன்றில் இவை முறைப்படி கையளிக்கப்பட்டன. இந்த வைபவத்தில் வேலணை கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரனும். முன்னாள் அதிபர் திரு. செ. இராசதுரையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

## கடற்றொழில் பயிற்சி வகுப்புகள்

[மன்னார்]

நவீன முறையில் மீன்பிடிப்பதற்கும், வலைகளைத் தாங்களே திருத்தம் செய்து, செலவீனங்களை குறைக்கும் பொருட்டும் கிராமம்தோறும் மீனவர்களை அழைத்து கடற்றொழில் பயிற்சி வகுப்புகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இப் பயிற்சி வகுப்புகள் மன்னாரில் இம் மாதக்கடைசியில் ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆரோக்கிய வாழ்வுக்கு

### ஆசனம் செய்வோர் கவனிக்க வேண்டியவை

ஆசனம் செய்பவர்களுக்கு உணவுக் கட்டுப்பாடும், ஒழுக்கக் கட்டுப்பாடும் அவசியம் தேவைப்படுவதால் அவைகளை நன்றாகத் தெரிந்துசெய்தால்தான் ஆசனங்களால் உண்டாகும் முழுப்பலனையும் விரைவில் அடையலாம். இல்லையேல் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது, பல கஷ்டங்களும் நேரிடும். எனவே அவர்கள் முன்னெச்சரிக்கையோடு ஆசனங்களைப் பழக வேண்டும்.

1. கோப்பி, தேநீர், மது, புலால் இவைகளைச் சாப்பிடக்கூடாது.

2. புகை பிடித்தல், புகையிலை, மூக்குப்பொடி, கஞ்சா, அபின் இவற்றை உபயோகிக்கக்கூடாது.

3. தீட்டிய அரிசி, உணவு, காய்கள், கீரை வகைகள், அவித்து அந்த நீரை வீசக்கூடாது.

4. இரவில் அதிக நேரம் விழித்தல், பசி இல்லாது சாப்பிடுதல், இவைகளைத் தவிர்க்க வேண்டும்.

5. தேகாப்பியாசமும் யோக அப்பியாசமும் ஒரே நேரத்தில் செய்யக்கூடாது.

6. எண்ணெய் தேய்த்து முழுகிய பின்னும், தலைவலி, காது வலி, மூக்குவலிகளுடனும், குளித்தவுடனும், சாப்பிட்டவுடனும் ஆசனங்கள் செய்யக்கூடாது. சாப்பிட்டு 5மணித்தியாலங்களுக்குப் பின்னும், குளித்து அரை மணித்தியாலத்திற்குப் பின்னும் ஆசனங்கள் செய்யவேண்டும்.

7. எந்தவிதமான மருந்துகளையும், குளிர்பானங்களையும், குளிக்கட்டிகளையும் பாவிக்கக்கூடாது.

8. காலையிலும் மாலையிலும் ஆசனம்செய்வது நல்லது.

9. பெண்கள் அசௌகரிய காலத்தின்போதும், கருவுற்ற இரண்டு மாதங்களின் பின்னும், பிரசவித்த 3 மாதங்களுக்குள்ளும் ஆசனங்கள் செய்யக்கூடாது.

10. உண்மையில் ஆசனம் செய்வதால் ஏற்படும் லாபம் உடம்பு நோயில்லாமல் சுறுசுறுப்பாகவும் நல்ல உடலோடும் வாழ்வதுதான் என்று உணர வேண்டும். நல்லுடல் பெறுவதே ஆசனப் பயிற்சியின் இலட்சியம்.

(வளரும்)

சுவாமிஜி

ஸ்ரீ சிதானந்தயோகி

## விபரம் சேகரிப்பு

(சுன்னாகம்)

ஆங்கிலம் கற்பிக்கும் செயற்திட்டங்களில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களையும் ஓய்வுபெற்ற அரச அலுவலர்களையும் வேலைக்கமர்த்தல் தொடர்பாக, ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கும் பாடசாலைகள் பற்றிய விபரங்களை கொத்தணி அதிபர்கள் மூலமாக கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகள் சேகரிப்பதாக அறியப்படுகிறது.

## வடஇலங்கை சங்கீத சபை அறிமுகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீதசபையின் அறிமுகப்பரீட்சையின் (எழுத்துப் பரீட்சை) விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுதல் இம்மாதம் 24ம் திகதியும், 25ம் திகதியும் நடைபெறவிருப்பதாக வட இலங்கை சங்கீத சபையினர் தெரிவித்தனர்.

இம் மாதம் 17ம், 18ம் திகதிகளில் புள்ளியிடுவதென முன்னர் அறிவிக்கப்பட்டபோதிலும் பரீட்சார்த்திகளின் வேண்டுதலுக்கிணங்க மேற்குறித்த திகதிக்கு புள்ளியிடுதல் பின்போடப்பட்டுள்ளது.

# 'சைவ உலகிற்கு மடங்கள் அதிக பணியாற்றியுள்ளன'

(சுன்னாகம்)

அழகுடன் பொலிவுற்று மண்டபங்களாக விளங்கிய எத்தனையோ மடங்கள் இன்று கதவு, யன்னல் என்பன அற்றநிலையில் காணப்படுகின்றன. அந்த நிலைக்கு மாறாக இந்த மண்டபத்தை அமைத்தவர்கள் பேணிப்பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு இனிமேல்தான் அவர்களுக்குண்டு. மடத்தை அமைத்தால் மட்டும் போதாது, அதைப் பேணிப்பாதுகாப்பதில்தான் அதன்சிறப்பு தங்கியுள்ளது.

சூராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய இராஜ இராஜேஸ்வரி மண்டபத் திறப்பு விழா வைபவத்தில் உரையாற்றிய சைவப்பெரியார் சிவ. சண்முகவடிவேல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு. சி. பாலசந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சண்முகவடிவேல் மேலும் கூறியதாவது:

மடங்கள் ஆற்றும் சேவைகள் ஐந்தாவது வேதமாக விளங்குகின்ற பெரிய புராணத்தின் மூலம் நன்கு அறியப்படுகிறது. மடங்களுக்கும் ஆலயங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. திருமருகல் ஆலய மடத்தில் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் பாம்பு தீண்டி இறந்த வணிகனை உயிர்பெற்றெழச்செய்து கன்னிகைக்கு மணம் நிறைவேற்றி வைத்தார்.

திருவிழிமிழலை திருத்தலத்தில் பஞ்சத்தால் வாடிய பாமரர்களுக்கும், சிவனடியார்களுக்கும் ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடை அரசும், திருமடங்களில் அமுது ஆக்கி அன்னமிட்டார்கள். திருவதிகைவீரட்டானத் திருத்தலத்திலுள்ள சித்தவடமடத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் உறக்கத்திலிருந்த போது இறைவன் அடியவராக வந்து பக்கலில் உறங்கி சிரசிலே திருவடியைச் சூட்டினார். பின்புதன்னை உணர்த்தி மறைந்தருளினார்.

திருப்பூம்புகலூரில் திருநாவுக்கரசு சுவாமிகளும், திருவதிகைவீரட்டானத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளை சைவ உலகுக்குத்தந்த திலகவதி அம்மையாரும் மடங்களை அமைத்தனர். ஐந்தாவது வேதமாகிய பெரியபுராணத்தையும் சேக்கிழார்பெருமான் சிதம்பரமடத்திலிருந்து பாடி அருளினார். இவ்வாறு மடங்கள் சைவ உலகிற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியது.

## நடவடிக்கை எடுக்க பணிப்பு

(சுன்னாகம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் மதிய உணவு வழங்கும் திட்டத்தினால் அதிபர்கள் மற்றும் அலுவலகங்களுக்கு ஏற்படும் காலதாமதத்தையும், வீண் சிரமத்தையும் நீக்கிவைக்கும் முகமாக இது சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களை உடனடியாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோட்டக் கல்வி அலுவலகங்களுக்குப் பொறுப்பான கல்வி அதிகாரிகள் யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பியை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்-முஸ்லிம் பாடசாலை 3-ம் தவணை

(சுன்னாகம்)

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் இரண்டாம், மூன்றும் தவணைகள் கீழ்க்கண்டவாறு இருக்கும் என யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலைஅதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

தமிழ் பாடசாலைகளின் இரண்டாம் தவணை 18-8-89 வெள்ளிக்கிழமை முடிவடைந்து மூன்றும் தவணை 18-9-89 திங்கள் தொடக்கம் 30-11-89 வியாழன்வரை நடைபெறும்.

முஸ்லீம் பாடசாலைகளின் இரண்டாம் தவணை 18-8-89 வெள்ளிக்கிழமை முடிவடைந்து மூன்றும் தவணை 11-9-89 திங்கள் தொடக்கம் 30-11-89 வியாழன் வரை நடைபெறும்.

## தட்டுப்பாடு

(சுன்னாகம்)

கோட்டக்கல்வி அலுவலகங்களில், பாடசாலைக்குத்தேவையானதும், ஆசிரியர்களின் உபயோகத்திற்குமான படிவங்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாக குறை தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்களின் சேவை நீடிப்புக்கான படிவம், வருடாந்த விபரத்திரட்டெடுப்புப் படிவங்கள், அதிபர்களின் அந்தரங்க அறிக்கைப்படிவங்கள், இளைப்பாறுதல் படிவம் போன்ற படிவங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## உதைபந்தாட்ட, கரபந்தாட்ட போட்டி

[யாழ்ப்பாணம்]

தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் போரூட் நிறுவனமும் தீவுப் பகுதி ரீதியாக 7பேர்கொண்ட உதைபந்தாட்ட, 6 பேர் கொண்ட கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை இணைந்து நடாத்தவுள்ளன.

வெற்றிபெறும் முதல் இரண்டு கழகங்களுக்கு போரூட் வெற்றிக் கேடயமும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

## பதவி உயர்வு

(பலாலி)

யாழ். மாவட்ட சுகாதார பரிசோதகர்களின்மேற்பார்வையாளராக கடமையாற்றிய திரு. த. மகாதேவன் யாழ். மாவட்ட உணவு மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

# "யாழ். தொழில்நுட்பக் கல்லூரி 1-ம் தரத்தில் இருந்தாலும் 2-ம், 3-ம் தர கல்லூரிகளின் வசதிகூட இல்லை!"

## சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

'இலங்கையில் உள்ள 29 அங்கீகரிக்கப்பட்ட அரச தொழில்நுட்ப கல்லூரிகளில் 1ம் தரத்திலுள்ள மூன்று தொழில்நுட்ப கல்லூரிகளில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியும் ஒன்று. ஆனால் நாட்டிலுள்ள 2ம், 3ம், தர கல்லூரிகளில் உள்ள வசதிகள் கூட இங்கு இல்லை''

இவ்வாறு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பொறியியல் மாணவர் மன்றத்தின் ''பொறியியலாளர்' எனும் மாத சஞ்சிகை வெளியீட்டு விழாவில் கல்லூரி விரிவுரையாளர் திரு. எஸ். விமலதாஸ் பேசுகையில் கூறினார்.

விரிவுரையாளர் திரு. ரி. கைலைநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் விரிவுரையாளர் திரு. எஸ். விமலதாஸ் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கல்லூரியின் பல குறைபாடுகளை, தேவைகளை நம் சஞ்சிகைகள் பத்திரிகைகள் [illegible] லாக தெரியப்படுத்த வேண்டும்.

இக் கல்லூரிப் பொறியியல துறைத் தேவைகளான நவீன உபகரண தொகுதிகள் எம்மிடமில்லை. கல்லூரி ஆரம்பமானபோது வழங்கப்பட்ட உபகரணங்களே இன்னமும் டாவலையில் உள்ளன. இந்த நிலைமைகளை நாம் கல்லூரியின் மன்றங்கள் வெளியிடும் இதுபோன்ற சஞ்சிகைகள் வாயிலாக வெளிக்கொண்டு வரவேண்டும்.

''இனவரும் காலங்களில் ''பொறியியலாளர்'' மூலம் எமது தேவைகள், குறைபாடுகளை வெளிக்கொண்டுவர வேண்டும்.''

விரிவுரையாளர் திரு. கைலைநாதன் தமது தலைமையுரையில் கூறியதாவது:

யாழ். தொழில்நுட்பக்கல்லூரியில் பொறியியல் மாணவர் மன்றம் தொடங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டபோதிலும், [illegible] சஞ்சிகை ஒன்று வெளிவருகிறது. இம் முயற்சி பாராட்டப்படவேண்டிய தொன்றாகும்.

யாழ். தொழில்நுட்ப கல்லூரியின் வசதிகள், தேவைகள் இன்னும் தீர்க்கப்படாத நிலையிலும்கூட, எமது கல்லூரி மாணவர்கள் அகில இலங்கை ரீதியான தொழில்நுட்பத் துறை பரீட்சைகளில் முன்னணி வகிக்கிறார்கள்.

சஞ்சிகையின்முதற்பிரதியை விரிவுரையாளர் திரு. ரி. கைலைநாதன் வழங்க, தொழில்நுட்பக் கல்லூரி பொறியியல் துறை விரிவுரையாளர் திரு. ஸ்ரீவிக்னேஸ்வரன் பெற்றுக் கொண்டார்.

பொறியியல் மன்றத்தலைவர் செல்வன் மு. விவேகானந்தன், கல்லூரி விரிவுரையாளர்களான திரு. சந்திரசேகரன், திரு. சு. சுந்தரம் பிள்ளை ''பொறியியலாளர்'' சஞ்சிகையின் ஆசிரியர் செல்வன் கா. யோ. கிரிதரன் ஆகியோரும் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவையிலுள்ளவர்களுக்கு சேவைக்காலப்பயிற்சி அளிக்கப்படவேண்டும்

[வவுனியா]

''அமைச்சின் அல்லது அதிகாரிகளுடைய சுற்றறிக்கைகளை மட்டும் நடைமுறைப்படுத்தாது சூழலுக்கு ஏற்றவாறு தாளுகச் சிந்தித்து, தாளுகச் செயற்படுபவர்களாக அதிபர்கள் இருக்க வேண்டும். மாணவர்கள் எல்லாப் பாடத்திலும் 85 வீதத்திற்கு மேலாகப் புள்ளிகள்பெற ஆசிரியர்கள் சேவைசெய்யவேண்டும்.''

இவ்வாறு வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் பாடவிதான பிரிவு மேலதிகப் பணிப்பாளர் கலாநிதி திருமதி சிரோன்மணி இராஜரட்ணம் வவுனியா கோட்டக்கல்வி செயலகத்தினை வைபவரீதியாகத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;-

''வசதிகுறைந்த பாடசாலைகளுக்குக் கூடுதலான அளவு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும். இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் முக்கிய கவனத்திற்கு எடுக்கவேண்டும்.

ஆசிரிய சேவையில் உள்ளவர்களுக்கு சேவைக்காலப் பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும். அதனை பாடசாலை ஆசிரியர்களே தமதுசூழலுக்கு ஏற்ப தயாரித்துக் கொள்ளவேண்டும். இதனை மாற்றி அமைக்கும் உரிமை ஆசிரியர்களுக்கு உள்ளது.

பாடசாலையின் நிர்வாகத் திறனையும். திட்டமிடலையும் ஆசிரியர்களே கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் செயலாற்றும் திறமை ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும்.

எமது பிரதேசத்தில் தலைமைத்துவ பயிற்சிகள், ஆய்வுகள் நடந்துள்ளது. ஆனால் இதனைப் பின்பற்றுபவர்கள் மிகக்குறைவாகவே உள்ளது'' என்றும் தெரிவித்தார்.

## சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

(நயினாதீவு)

தீவுப்பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம்எடுப்போர் தொகை அதிகரித்துள்ளது. இதனால் அடிக்கடி இரவு நேரங்களில் மின்சாரம் தடைபடுவதினால்சட்டபடியாயனமின் பாவனையாளர்கள் வெகுசிரமத்திற்குள்ளாகினார்கள். சட்டவிரோத மின்சாரம்எடுப்பவர்கள் தங்கள் செயலைநிறுத்தாதபட்சத்தில் கடும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் திருட்டுமின்சாரம் பாவிப்பவர்களின் அனைத்து உடைமைகளும் பறிமுதல் செய்யப்படும் எனவும் வேலணை மின்சார சபை அத்தியட்சகர் எச்சரிக்கை செய்துள்ளார்.

## ஆசிரியர்களின் தேவைகள்

(வேலணை)

தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கான ஆலோசனைகளின் பேரில் வேலணை கோட்டக் கல்விஅலுவலக அதிகாரிதிரு. சி. புலேந்திரன் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இவரின் இந்த நடவடிக்கைகளின் பிரகாரம் பிரதி புதன்கிழமைகள் தோறும் ஆசிரியர்கள், வேலணை கோட்டக் கல்வி அலுவலகத்திற்குச் சென்று குறைபாடுகள், தேவைகள் என்பவற்றைச் சேகரித்துவருகின்றனர்.

## சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய சேவையில் சேருவதற்குமுன் சேவைக்கு முந்திய பயிற்சி நெறியில் பங்குபற்றிய ஆசிரியர்களுள் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி நெறி இம்மாதம் 19-ம் திகதி முதல் 22 - ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வடமராட்சி கோட்டக் கல்விப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் வேலணை கோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சேர்வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்திலும், மானிப்பாய், வட்டுக்கோட்டை காங்கேசன்துறை வட்டாரப் பாடசாலைகளுக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாண வட்டாரப்பாடசாலைகளுக்கு வேம்படி மகளிர்கல்லூரியிலும் மேற்குறிப்பிடப்பட்ட நாட்களில் இப்பயிற்சிநெறி நடைபெறும்.

# பாடசாலைகள் பண்புள்ள மக்களை உருவாக்கவேண்டும்
## கல்வி அதிகாரி உரை

(நாவற்குழி)

'மாணவர்களின் ஒழுக்கத்திலிருந்து ஒரு பாடசாலையின் வளர்ச்சியை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது'.

கைதடி நாவற்குழி மகாவிஷ்ணு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இல்லங்களுக்கான மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய யாழ் கோட்டக் கல்வி அலுவலக கல்வியதிகாரி திரு. இ. சிவானந்தன் இவ்வாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. வே. இராமர் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

இந்த வைபவத்தில் தொடர்ந்து பேசிய திரு. சிவானந்தன் கூறியதாவது:-

பிள்ளைகளுக்கு உரிய காலத்தில் கல்விச் செல்வத்தை வழங்குவது பெற்றோர்களின் கடமையாகும். பிள்ளைகளின் அறிவையும் ஆற்றலையும் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதன் மூலமே நாம் காண முடியும்.

ஆகையால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி நல்லதொரு எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவது பெற்றோர்களின் கையிலேயே தங்கியுள்ளது. பண்புள்ள மக்களை உருவாக்குவதே பாடசாலைகளினது கடமையாகும் ஆகையால் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது பெற்றோரின் மிக முக்கியமான பணியாகும்.

இன்று நகரப் பகுதியில் இருக்கும் பாடசாலைகள் நன்முக வளர்ச்சியடைந்து ஓரளவு தாளுகவே இயங்கும் நிலையில் இருக்கின்றன. அதனால் வளர்ச்சியடைந்து வரும் கிராமப்புற பாடசாலைகளுக்கு உதவுவதிலேயே நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம் என்று கூறினார்.

இப்போட்டியில் சிறப்பு விருந்தினராக கைதடி கொத்தணி அதிபர் திரு. சோ. கணேசலிங்கம் கலந்து கொண்டார்.

இப்போட்டி முடிவில் திரு. சிவானந்தன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

# "தமிழ்ப் பகுதிகளில் விளையாட்டுத் துறைக்கு ஒத்துழைப்பு வேண்டும்"

(கிளிநொச்சி)

விளையாட்டுத துறைக்கு தென்பகுதியில் அளிக்கப்படும் வசதிகளும், வாய்ப்புக்களும் தமிழ்ப்பகுதிகளில்வழங்கப்படுவதில்லை. இதனால் திறமையான தமிழ் விளையாட்டுவீரர்கள்மிகவும் பாதிப்படைந்துள்ளனர். இந்தப்பாரபட்சமான நடவடிக்கை மாறவேண்டும்.

கிளிநொச்சியில்அண்மையில் நடைபெற்ற விளையாட்டு அபிவிருத்தி கருத்தரங்கில் உரையாற்றிய மாவட்ட உதைபந்தாட்ட சாம்பியன்களில் ஒருவரான திரு. யே. நேசயேசுதாசன் கென்னடி இவ்வாறு கூறினார்.

இந்த வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

கிளிநொச்சி மாவட்டம் இன்று பலதுறைகளிலும் வளர்ச்சியடைந்துவருகிறது. இந்தவகையில் விளையாட்டுத் துறைக்கு சகலரும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துதவ வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினர்.

# "மனிதனுக்கு கோபம் பெரும் பகையாகும்"

(யாழ்ப்பாணம்)

''மனமானது எந்த நேரமும் ஓய்வின்றிச் சலித்துக்கொண்டேயிருக்கின்றது. அதனை இறைவனுடைய திருவடி தியானத்தால் ஒருமுகப்படுத்தவேண்டும். மனமானது ஓடித்திரிவதால் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அதனை அடக்குவதனாலேயே சுகம் உண்டாகின்றது. கோயில் வழிபாடு, பூசை,யோகம் முதலிய எல்லா வகையான கிரியைகளும் மனதை ஒருவழிப்படுத்தும்பொருட்டேயாகும்''

என்று நீராவியடி ஸ்ரீவிநாயகர் ஆலய மண்டலாபிஷேகத்தில், பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா தினமும் நடாத்திவரும் கந்தபுராண விரிவுரையின் போது கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ''மனிதனுக்குக் கோபம் பெரும்பகையாகும். ஒருவன் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமானால் சினத்தைவிட வேண்டும். கோபத்தைவிட்டவர்க்கே மனம் சாந்தியடையும். கோபம் பாபத்திற்கு அஞ்சாது. மனதைத் தீயவழியிற செல்லாது தடுத்து, சினத்தை அறவே விடுவோமானால் பலகோடி காலம் தவம் புரியினும் பெறமுடியாத எந்தை கந்தவேளின் திருவருள் தானே நம்மைத்தேடிவரும்'' என்றார்.

## பின்அடைப்பான் நோய்

(வேலணை)

தீவுப்பகுதியில் உள்ள ஆடுகளுக்கு பின் அடைப்பான் நோய்கள் அதிகமாக காணப்படுகின்றது. இவ்விதமான நோயை பரவவிடாது உடன் தடுப்பதற்கான தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு வேலணைப்பகுதி மிருக வைத்தியாதிகாரி வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இந்நோய்களுக்குள்ளான ஆடுகளின் பின்னங்கால் தொடைகள் வீங்கியிருக்கும் என்றும் இடையிடையே காய்ச்சல் குணங்களும், சோம்பேறிக் குணங்களும் தென்படும் என்றும் இவை போன்ற குணங்கள் தென்பட்டால் உடனடியாக தம்முடன் தொடர்பு கொண்டு ஆடுகளுக்கு தடுப்பு ஊசிகளை ஏற்றிக்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

## இருவர் சுட்டுக்கொலை

[கொழும்பு]

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின்சார்பில் போட்டியிட்ட திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த டபிள்யூ. கே. விஜேதாசா என்பவரும், வி.எஸ். ஆனந்த என்ற மற்றொருநபரும் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் இருவரும் பட்டப்பகலில் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## வீதி சீர்கேடு

(பண்டத்தரிப்பு)

சில்லாலையிலிருந்து பண்டத்தரிப்புக்குச்செல்லும் பிரதான வீதி குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு சீர்கெட்ட நிலையிலிருக்கின்றது. நீண்டகாலமாக திருத்தப்படாதிருக்கும் இவ்வீதியை விரைவில் புனரமைப்புச்செய்துதருமாறு சில்லாலை மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கம் வலி, தென்மேற்கு பிரதேசசபை விசேட ஆணையாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

## உடையமைத்தல் வகுப்பு

(சுன்னுகம்)

முறைசாராக்கல்வித் திட்டத்தின் கீழ் உடையமைத்தல் வகுப்புகள் அண்மையில் இணுவில் அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தில் யாழ். கல்வித் திணைக்கள தொழில் நுட்பப் பாடக்கல்வி அதிகாரி திரு. ச.சுப்பிரமணியத்திஞல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் திரு. செ, சோதிப்பெருமாள் தலைமையில் நடைபெற்ற இவ்வாரம்பவைபத்தில் தொழில் நுட்பப்பாடவெளிக்கள உத்தியோகத்தர்கள் திரு. எஸ். சிதம்பரநாதன். திரு. பால [illegible] செல்வி ஆர். ராதாவும் உரையாற்றினர்.

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்–பிரபு
நடித்த
சின்னத்தம்பி
பெரியதம்பி

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
பயங்கரக் கராட்டிகள்
வாள்சண்டைகள், கார்
ஓட்டங்கள் நிறைந்த
படம்.
MAJESTIC
THUNDERBOLT
(C/scope)

## குடிநீர் தட்டுப்பாடு

(நெல்லியடி)

மதிய உணவு வழங்கப்படும் இச்சந்தர்ப்பத்தில்கூட வடமராட்சியிலுள்ள பல கிராமப்புறப் பாடசாலைகளில் குடிநீர் இன்றி மாணவர்கள் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால்போலும் மாணவர் பாடசாலை செல்லும்பொழுது குடிநீர் போத்தல் [illegible] கொண்டுசெல்வதை [illegible] கூடியதாகஇருக்கின்றது.

## சென்னையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து கருத்துத்தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

இலங்கைத் தமிழ்மக்களின் பாதுகாப்புக்கும், உரிமைக்கும் கூட்டு உத்தரவாதமளித்த நாடுகள் இலங்கையும் - இந்தியாவுமே. எனவே இந்திய – இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக எஞ்சியுள்ள விடயங்கள் குறித்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்த இந்தியா தயாராக உள்ளது என்றும் திரு. காந்தி கூறினர்.

## இந்திய நடவடிக்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கையில் ஜூன் 14ந் திகதிக்குப் பின் இந்திய நடவடிக்கை சகலதும் நிறுத்தப்படவேண்டும். அதன் பின் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கிறிமினல் குற்றமாகக் கருதப்படும்.''

''இந்தியாவின் நலன்களில் அக்கறை உள்ளவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். நாட்டுப்பற்று மிக்க இலங்கையர்கள் இதற்கு ஒத்துழைத்து இந்தியப் பொருட்களையும், தொழில்கள் மற்றும் தொடர்புகளையும் பகிஷ்கரிக்கவேண்டும்.''

திருகோணமலை துறைமுகத்தில் அண்மையில் இடம் பெற்ற குண்டுவெடிப்புக்குத் தாமே பொறுப்பு எனவும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆறு ஈரோஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுதம்பிள்ளை நாகரத்தினம் (42 வயது), மங்கேஸ் (36 வயது), குணபாலன் (28 வயது), நாகலிங்கம் சிவபாலன் (19 வயது), ஆகியோரின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டவையாகும்.

கடந்த 12-ம் திகதி வவுனியாவுக்கு வந்த இவர்களிடமிருந்து தகவல் எதுவும் கிடைக்காததால் இவர்களைத் தேடியே தாம் இங்கு வந்ததாகவும் பின்னரே இச்சம்பவத்தை அறிந்திருந்ததாகவும் திரு. பாலகுமாரன் மரணவிசாரணையின் போது தெரிவித்தார்.

## அமைதிப்படைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துறை வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்து யாழ். செயலகத்தைச் சென்றடைந்தது.

''அமைதிப்படை வேண்டும்'', ''அரசு ஊழியர்களே வேலைக்குத் திரும்புங்கள்'' ''இந்திய அரசே இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்து'', ''ஸ்ரீலங்கா அரசே இனக்கலவரத்தைத் தூண்டாதே'' ஆகிய கோஷங்களை அட்டைகளில் தாங்கியவாறும் கோஷித்தவாறும் இந்த ஊர்வலம் சென்றது.

ஊர்வலத்தின் இறுதியில் பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்திய அமைதிப்படையை வெளியேற வேண்டாம் என்று கோரும் மகஜர் ஒன்றை இந்தி அமைதிப்படை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுக்காலை 7 மணியிலிருந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் மினி பஸ்களிலும், வாகனங்களிலும் மத்திய கல்லூரிப் பகுதிக்கு வந்துசேர்ந்தவண்ணமிருந்தனர். காலை பத்து மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் செயலகத்தைச் சென்றடைய பல மணிநேரம் எடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமைதிப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

மாள் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊர்வலத்தின் முடிவில் யாழ். பழைய பூங்கா வளவில் கூடியிருந்த மக்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினூர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வடக்கு, கிழக்கு மக்களுக்கு சுயாட்சி ஏற்பட்டவுடனும், இங்குள்ள தமிழர்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய சூழல் உருவான பின்னரும்தான் அமைதிப் படையினர் வெளியேறலாம். ஆனுல் இவையெல்லாம் ஏற்பட முன்பு இந்தப் படையினர் வெளியேறிஞல் அல்லது வெளியேற்றிஞல் மீண்டும் என்ன முகத்துடன் நாம் இந்தியாவிற்கு அகதிகளாகச் செல்வது.

''வடக்கு, கிழக்கு மக்களின் நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட பெருந் தொகையான பணம் அரசாங்க அதிபர்களின் காரியாலயங்களில் தேங்கிக் கிடக்கிறது. இடம்பெயர்ந்தவர்களுக்காக வழங்கப்படவிருந்த 2 ஆயிரம் ரூபாவும், தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கான 4 ஆயிரம் ரூபாவும், வீடு சேதமடைந்தவர்களுக்கான 15 ஆயிரம் ரூபாவும் அரசாங்க அதிபர் அலுவலகங்களிலேயே தேக்கமடைந்துள்ளது.

''கச்சேரி பூட்டப்பட்டிருந்தால் இவற்றை எப்படி வசீங்கமுடியும். அரச நிர்வாக இயந்திரம் சிறப்பாக இயங்கினுல்தான் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும்.''

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி பழனியப்பா (பத்தர்)

வண்ணுர்பண்ணையைச் சேர்ந்த நல்லதம்பி பழனியப்பா 15-6-89-ல் காலமானுர். இவர் இரத்தினத்தின் அன்புக்கணவரும், இராசதுரை, சீதாலட்சுமி (ஈழநாடு லிமிட்டெட்)ஆகியோரின்மைத்துனரும், கண்ணம்மாவின் சகலனும், பவானந்தன், யோகானந்தன் (கிருபா), துஷ்யந்தன் ஆகியோரின் மாமனுரும், ஜெகசோதியின் சிறிய தகப்பனுரும், சிந்துஜனின் அன்புப்பேரனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (16-6-89) பி. ப. 2-00 மணியளவில் 2/7, துரைராசா வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **இ. யோகானந்தம் (கிருபா)**

2/7, துரைராசா வீதி,
வண்ணுர்பண்ணை,
யாழ்ப்பாணம்.

### திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை

திருமதி றேசலின் அந்தோனிப்பிள்ளை (10-6-89) அன்று காலமானுர். அன்னுர் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சிங்கராசா அந்தோனிப்பிள்ளையின் அன்புமனைவியும், ஞானப்பிரகாசத்தினதும், காலஞ்சென்ற நேசத்தினதும் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சிங்கராசாவினதும், ராசம்மாவினதும் அருமை மருமகளும் செல்வராசா ஜோசப் (Post Master C.M.E. Colombo) காலஞ்சென்ற மலக்கியாஸ் ஜெயம் ஆகியோரின் அன்பு சகோதரியும், புனிதம், கில்வின் (Engineer U. K.), பெனிட்டா (France), மெற்றீனு (Canada), சுசி (Switzaland), டொரெக்ஸ், மதி, யூட் (Canada), ரெமி (Canada), ரொசிஸ்டன் (St. Patricks College, Jaffna) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணரெத்தினம் (Managing Director, G.P.N. Construction Company Ltd), மனேகரன் (France), மரியநாயகம் (Canada), விஜயரெட்ணம் (Switzaland) ஆகியோரின் அருமைமாமியாரும், நன்சி, நர்கிஷ், சயிலஜா, சஞ்சுதா, அன்ரன், அனூரியன் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை காலை (17-6-89) 11-00 மணியளவில் அன்னுரின் இல்லத்தில் இருந்து அச்சுவேலி புனித. சூசையப்பர் சேமைக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்ருர், உறவினர், நண்பர்கள் இதை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**திரு. S. J. குணரெத்தினம்**

''றேஸ் மஹால்'',
அச்சுவேலி. (சி 2959)

### திரு. சந்தியா செபஸ்ரி (இராசேந்திரம்)

திரு. சந்தியா செபஸ்ரி (இராசேந்திரம் - Arrkay and Sons உரிமையாளர்) காலமாகிவிட்டார். அன்னுர் செபமாலையின் (கனகம்) அன்புக்கணவரும், பிரான்சீஸ் (சட்டத்தரணி, யாழ். மரண விசாரணை அதிகாரி), பீற்றர் பொன்ராஜா, இம்மானுவல் (Uni-Traderes Enterprises, Colombo), சின்னராஜா (உப-தபால் அதிபர், ஆஸ்பத்திரி வீதி), நாதன் Arrkay & Sons ஸ்ரான்லி வீதி), மரியநாயகம் Arrkay Transpert Service) பிலோமினு, சுகிர்தம் ஆகியோரின் அன்பு தந்தையும், சின்னத்துரை (நிர்வாக அதிகாரி P. D. P.) காலஞ்சென்ற மனுவல் சேவியர் (சிறைச்சாலை உத்தியோகத்தர்), திருமதிகள் வயலட் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, யாழ். அடைக்கலமாதா ம. வி) எலிசபெத், செல்வராணி, அருள்மணி, கிறேஸ்மணி, பொன்மணி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார்.

அன்னுரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை 17-6-89 மாலை 3-00 மணிக்கு 203, 2ம் குறுக்குத் தெருவிலுள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு அர்ச் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **S. S. பிரான்சிஸ்**
(சட்டத்தரணி,
யாழ். மரணவிசாரணை
அதிகாரி)

203, 2ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(சி-2815)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sr iLanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

### கற்பகம் புதியகிளை

(வண்ணுர்பண்ணை)

''கற்பகம்'' விற்பனை நிலையம் ஒன்றுஇன்று மானிப்பாய் சந்தைக்கு அருகாமையில் திறந்துவவக்கப்பட இருக்கிறது.

### இந்திய விமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுச் சென்றதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை தென்பகுதியில் சேவையில் ஈடுபடும் இந்தியத் தயாரிப்பான ஆட்டோ ரிக்ஷாக்கள் எதுவும் வீதிகளில் காணப்படவில்லை.

### மாணவர்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருல் மாணவர்கள் தமது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லமுடியாவிட்டால் அவர்கள் மாணவர்கள் என்று உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் பாடசாலைக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

''சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படும் 'மாணவர்களை விசாரணையின் பின்னர், அவர்களைப் பொறுப்பேற்பதற்கு அதிபர்கள் முன்வந்தால் விடுதலை செய்யப்படுவார்கள். பாடசாலைகளின் உள்ளே எவரும் ஆயுதத்துடன் இனிமேல் நடமாட முடியாதவாறு நாம் பார்த்துக் கொள்வோம்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பிரதமர் காந்தி

(1-ம பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசின் இந்தக் கண்டன அறிக்கை, இருநாடுகளுக்குமிடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதையே எடுத்துக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''இந்திய அமைதிப்படை இலங்கையில்நிலைகொண்டிருப்பதற்கு ஆதரவாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிலர் பொறுப்பற்ற முறையில் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும்.

''இலங்கையில் இருக்கும் இந்திய அமைதிப்படை திரும்பிச் செல்லாதென்று தற்போது இலங்கை மக்களின் உள்ளத்தில் உள்ள பீதியை இதுபோன்ற அறிக்கைகள் உறுதிப்படுத்துவதாகவே உள்ளன.

''இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற ஜனுதிபதியின் நிலைப்பட்டை எமது நாட்டில் உள்ள சகல மக்களும் அங்கீகரித்துள்ளனர். மக்களின் இந்த அங்கீகாரம் கடந்த தேர்தலில் ஐ. தே. கவுக்கும ஜனுதிபதிக்கும் அளித்த ஆணையை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.''

### உத்தியோகபூர்வ பதில் இடைக்கவில்லை

ஜனுதிபதியின் கோரிக்கைக்கு இந்திய அரசிடமிருந்து இதுவரை உத்தியோகபூர்வமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கூட்டம் நடந்த இடத்தில் சக்திவாய்ந்த கண்ணிவெடி!

### அமைச்சரும் மாணவர்களும் தப்பினர்

(கொழும்பு)

மிகவும் சக்திவாய்ந்த கண்ணிவெடி ஒன்று உரிய நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால் பல மாணவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கடந்த செவ்வாய்கிழமை ஆனைமடுத் தொகுதியில் அப்பகுதியின் எம். பியும் காணி இராஜாங்க அமைச்சருமான திரு. அசோகா வடகமங்காவ கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் பெருமளவு பாடசாலை மாணவர்களும் பங்குபற்றவிருந்தனர்.

திரு.வடிவமங்கவாவுக்கு வரவேற்பு அளிக்கப்படும் இடத்தில் இந்த கண்ணிவெடி புதைக்கப்கட்டிருந்தது. பிற்பகல் மூன்று மணிக்கு வெடிக்கும் விதத்தில் கண்ணிவெடி வைக்கப்பட்டிருந்தது. ஆனுல் அங்கிருந்த பெண் ஒருவர் கண்ணிவெடியுடன் இணைக்கப்பட்டிருந்த இரண்டு வயர்களை அவதானித்ததைத் தொடர்ந்து பொலிஸார் வரவழைக்சப்பட்டனர்,

இரண்டு வயர்களும் இருபது கிலோ எடையுள்ள கண்ணிவெடியுடன் பிணைக்கப்பட்டிருந்தன.

சம்பந்தப்பட்ட கண்ணிவெடியின் வயர்கள் அந்தப் பெண்ணின் கண்களுக்குத் தப்பிருந்தால் அன்று பல பாடசாலை மாணைர்களின் உயிர்கள் பலியாகியிருக்குமென பொலிசார் தெரிவித்தனர்.

### கிளிநொச்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ந்த திருநாவுக்கரசு ஜெயக்குமாரன் [வயது 17], உருத்திரபுரத்தைச் சேர்ந்த செல்லப்பு விக்னேஸ்வரன் [வயது 18] ஆகியோரின் சடலங்கள் என்று அடையாளம் காணப்பட்டது, இம்மரணங்கள் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி மேற்கொண்டார். சடலப் பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. சிவகுமார் மேற்கொண்டு அறிக்கைசமர்ப்பித்தார். இரு சடலங்களும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

## மரண அறிவித்தல்

### சாம்பசிவம் பரமகுரு (சுரேஸ்)

(நோர்வே)



நல்லூரரைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிராசா சாம்பசிவம் (சித்தார்த்தர்) சிவசோதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சிவகுரு சிவபாக்கியத்தின் அன்புப் பேரனும், சுகந்தி (ஆசிரியர், நாவலப்பிட்டி), காந்தினி, தாரணி, தயாளன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசங்கரன் (சின்னத்துரை அன் பிறதர்ஸ்), நாராயணன் ஆகியோரின் பெருமகனும் ஆவார், அன்னுரின் ஈமக்கிரியைகள் நோர்வேயில் இன்று (16-06-89) வெள்ளிக்கிழமை நடைபெறும் என்பதை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்ருேம்.

தகவல்: **திருமதி சாம்பசிவம், சுகந்தி.**
மாமன்மார்கள்: **மகேந்திரராசா,**
**தில்லைநாதன் (பேபி.)**

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (சி 2968)

### பொன்னையா இராசரத்தினம் (இராசு)

புங்குடுதீவு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னையா இராசரத்தினம் 15-6-89 அன்று சிவபதமெய்திவிட்டார். இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், இரஞ்சிதபூஷணி, பரமேஸ்வரன், மகேஸ்வரன், நடேஸ்வரன், கனகலிங்கம் (ஜெர்மனி), சரோஜினிதேவி, சிறிகுமார் (பிரான்ஸ்), இராசலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், க. பாலசுப்பிரமணியம், நாகேஸ்வரி, செல்வரஞ்சிதம், விஜயலட்சுமி, இராசலட்சுமி, சிவபாலரட்ணம் (ஆசிரியர்), ஆகியோரின் அன்பு மாமனுரும், அமிர்தம், இராசலட்சுமி (லண்டன்], நல்லம்மா (U. K.), சிவக்கொழுந்து, காலஞ்சென்றவர்களான தையல்முத்து சின்னம்மா, இராசையா, தம்பிஐயா, தம்பித்துரை ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னுரின் ஈமக் கிரியைகள், இன்று (16-6-89) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்தகனக் கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

(சி2816) தகவல்: **அ. க. பாலசுப்பிரமணியம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org